# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் சாதரணக்கூட்டம் தனிஅலுவலரால் **17.08.2021ம்** தேதி செவ்வாய்க்கிழமை காலை **11.00** மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**பொருள்: 96**

தேவகோட்டை நகராட்சியில் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP) 2020–21–ன் கீழ் ரூ.1140.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள்அமைக்கும் பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண் (MS) 02 நாள்:– 07.01.2021–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. முதன்மை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்.1653/2020/பி2 நாள்.08.01.2021–ல் ஐந்து தொகுப்பு பணிகளாக மேற்கொள்ள தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. மேற்காணும் திட்டத்தில் 5 சிப்பம் பணிகள் மதிப்பீட்டுத் தொகை ரூ. 1140.00/– இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 26.07.2021–ல் ஒரு உறை ஒப்பந்தப்புள்ளிகள் (E - ஒப்பந்தப்புள்ளி) முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது . அதில் வரப்பெற்ற ஒப்பந்த பணிகளுக்கு Evaluation பணிகள் செய்து தடையின்மை சான்று (NOC) பெற 02.08.2021 அன்று TNUIFSL சென்னை நிறுவனத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இப்பணிகளுக்கு TNUIFSL சென்னை நிறுவனத்திடமிருந்து 09.08.2021 அன்று தடையின்மை சான்று (NOC) கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்டுள்ளது.

| சிப்பம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | B. சுப்பிரமணியன் | ரூ.2,65,60,973/– |
| 2 | V. மீனாள் & கோ | ரூ.2,67,82,250/– |
| 3 | D.செந்தில்குமார் | ரூ.2,62,15,654/– |
| 4 | M.அழகர் | ரூ.2,57,32,105/– |
| 5 | திருமதி. G. சாந்தி | ரூ.1,14,14,678/– |

மேற்படி ஒப்பந்த பணிகளுக்கு TNUIFSL சென்னை நிறுவனத்திடமிருந்து 09.08.2021 அன்று தடையின்மை சான்று (NOC) பெறப்பட்டுள்ளதை ஏற்று ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. வரப்பெற்ற ஒப்பந்த பணிகளுக்கு TNUIFSL சென்னை நிறுவனத்திடமிருந்து பெறப்பெற்ற தடையின்மை சான்று (NOC)- ன் படி மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று LOA மற்றும் பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் மதிப்பீட்டைவிட கூடுதல் செலவீனத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 96**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 97**

தேவகோட்டை நகராட்சியில் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP) 2020–21–ன் கீழ் ரூ.1140.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண் (MS) 02 நாள்:– 07.01.2021–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. முதன்மை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறைக்

கடிதம் ந.க.எண்.1653/2020/பி2 நாள்.08.01.2021–ல் ஐந்து தொகுப்பு பணிகளாக மேற்கொள்ள தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. மேற்காணும் திட்டத்தில் சிப்பம் – 5 பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 112.00/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள 26.07.2021–ல் ஒரு உறை ஒப்பந்தப்புள்ளிகள் (E - ஒப்பந்தப்புள்ளி) முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது . அதில் வரப்பெற்ற ஒப்பந்த பணிக்கு Evaluation பணிகள் செய்து தடையின்மை சான்று (NOC) பெற 02.08.2021 அன்று TNUIFSL சென்னை நிறுவனத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இப்பணிக்கு TNUIFSL சென்னை நிறுவனத்திடமிருந்து 09.08.2021 அன்று தடையின்மை சான்று (NOC) பெறப்பட்டுள்ளது. இதில் சிப்பம் – 5 பணிக்கு திருமதி. G. சாந்தி, ஒப்பந்ததாரர் ரூ.1,14,14,678/–அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திற்கு TNUIFSL சென்னை நிறுவனத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட கூடுதலான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். நகராட்சி விதியின்படி நகர்மன்ற வரம்பிற்கு மேல் வருவதாலும் மேற்படி ஒப்பந்ததாரர் திருமதி. G. சாந்தி, என்பவருக்கு ஒப்பந்தப்புள்ளியின் கூடுதல் விலை விகிதத்தில் விலை விகிதத்தினை விலைக் குறைப்பு செய்ய இசைவு கடிதம் கோரி 11.08.2021–ம் தேதியில் கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் ரூ.1,12,37,377/– விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள சம்மதித்து 12.08.2021–ம் தேதியில் கடிதம் அளித்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. வரப்பெற்ற ஒப்பந்த பணிகளுக்கு TNUIFSL சென்னை நிறுவனத்திடமிருந்து பெறப்பெற்ற தடையின்மை சான்று (NOC)- ன் படி மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று LOA மற்றும் பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் மதிப்பீட்டைவிட கூடுதல் செலவீனத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 97**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 98

தேவகோட்டை நகராட்சியில் தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாடு திட்டம் TNSUDP 2020 – 21ன் கீழ் 5 சிப்பங்களோடு சாலைப்பணிகள் மேற்கொள்ள வேண்டி இராண்டாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகளை செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்காணும் நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின் வருமாறு:–

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | Moulis Advertising | DIPR/1846/2021 | 3,97,984/– |
| | | மொத்தம் | 3,97,984/– |

மேற்காணும் விளம்பர நிறுவனத்திற்கு தொகை ரூ.3,97,984/–க்கு செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. வரப்பெற்ற ஒப்பந்த பணிகளுக்கு TNUIFSL சென்னை நிறுவனத்திடமிருந்து பெறப்பெற்ற தடையின்மை சான்று (NOC)- ன் படி மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று LOA மற்றும் பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் மதிப்பீட்டைவிட கூடுதல் செலவீனத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 98**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 99</u>**

**பார்வை:** மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை அவர்களின் கடிதம் ந.க.எண்:87/செ.ம.தொ./2021 நாள்: 22.07.2021.

---

பார்வையில் காணும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரை கடிதத்தின் பேரில் இந்நகராட்சியில் 2020–21 –ம் நிதியாண்டில் நடைபெற்ற பல்வேறு திட்டப்பணிகளை சுதந்திரதின சிறப்பிதழ் – 2021 தீக்கதிர் நாளிதழில் 15.8.2021 அன்று வெளியிடப்பட்டுள்ளது. விளம்பரம் வெளியிட்டதற்கான தீக்கதிர் நாளிதழ் நிறுவனத்தாரிடம் இருந்து கீழ்காணும் விபரப்படி பட்டியல் வரபெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | தீக்கதிர் | MDO11593 /21-22 | 20,000/– |
| மொத்தம் | | | 20,000/– |

மேற்காணும் விளம்பர நிறுவனத்திற்கு தொகை ரூ.20,000/–க்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணு செலவீனத்தை பொதுநிதியில் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 99</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 100</u>**

தேவகோட்டை நகராட்சியில் புரவிப்புயல் நிவராண பொதுநிதி 2020–2021–ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 13.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்:23 நித்தியகல்யாணிபுரம் பகுதியில் சிறு பாலம் அமைத்தல் பணி. | 4.00 | 1)திரு. T.பாண்டி | 0.02 % குறைவு |
| | | | 2) திரு. V.கணபதி | 6.75 % அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**<u>தீர்மான எண்: 100</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 101</u>**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதரப் பிரிவின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் – மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி தேவையான கிருமிநாசனிகள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் வாங்கி இருப்பில் வைக்க

அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி கீழ் குறிப்பிட்ட பொருள்கள் வாங்க வேண்டியுள்ளது.

**<u>தேவையான பொருள்கள்:–</u>**

1. 3 PLY Mask - **35,000 எண்ணம்.**
2. Lysol - **3000 லிட்டர்.**

மேற்குறிப்பிட்ட பொருள்களை பொதுசுகாதார அவசர அவசியம் கருதி வாங்கி வழங்கிடவும் உடன் விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை தொடரவும் மேற்காணும் பொருள்களை வாங்க துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி உத்தேச செலவீனம் ரூ.**9.50** இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 101</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.